விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper In Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 036 வள்ளுவர் ஆண்டு 2055 தை 10 புதன்கிழமை (24.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## வவுனியாவில் உறவுகள் நீதிக்காக போராட்டம்



11

## கிளிநொச்சியில் முதியவரை ஏமாற்றி இலட்சக்கணக்கில் பண மோசடி

### வங்கி உத்தியோகத்தரும் அவரது கணவரும் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் முதியவர் ஒருவரை ஏமாற்றி சுமார் ஆறு இலட்சம் ரூபாய் பணத்தினை மோசடி செய்த இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கைது நடவடிக்கையானது நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது தனியார் வங்கி ஒன்றில் பணிபுரியும் வங்கி உத்தியோகத்தரும் அவரது கணவருமே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சிப்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதி 11

## போதைக்கு முடிவுகட்டும் வரை

# யுக்திய நடவடிக்கை தொடர்ந்து நடைபெறும்

### சர்வதேச அழுத்தத்துக்கும் அஞ்சோம் – டிரான்

(கொழும்பு)

**சர்வதேசத்தில் இருந்து எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் முன்வைத்த காலை பின்வைக்கப் போவதில்லை, போதைப் பொருள் வலையமைப்புக்கு முடிவுகட்டும் வரை யுக்திய நடவடிக்கை தொடரும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் சூளுரைத்துள்ளார்.**

யுக்திய செயற்றிட்டத்தின் முதல் மாத நடவடிக்கை வெற்றியளித்துள்ளது. எனினும், யுக்திய நடவடிக்கையை முன்னெடுக்கும்போது பல தடைகளும் வருகின்றன. சர்வதேச ரீதியில் அழுத்தங்கள் வருகின்றன, நாட்டுக்கு 11



## நயினைத் தாய்க்கு இன்று மகா கும்பாபிஷேகம்



11

## நாடு முழுவதும் சுற்றிவளைப்பு

### 955 பேர் கைது

(கொழும்பு)

கடந்த 24 மணித்தியாலத்தில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய சுற்றிவளைப்பில் மேலும் 955 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, போதைப் பொருள் தொடர்பிலான சுற்றிவளைப்பின் போது 633 பேர் கைது செய் 11



## இணையவழிச் சட்டமூலம் கருத்துச் சுதந்திரத்தை பாதிக்கும்

### சபையில் சிறீதரன் எம்.பி

(கொழும்பு)

பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள இணையவழி பாதுகாப்புச் சட்டமூலம் மக்களின் கருத்துச் சுதந்திரத்தை தடுக்கும்வகையில் உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் 11

5 நாள் தொடர் காய்ச்சல்

## கிளிநொச்சியில் 40 வயது குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

5 நாள் தொடர் காய்ச்சல் காரணமாக கிளிநொச்சியில் 40 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கிளிநொச்சி கல்லாறு பகுதியைச் சேர்ந்த கந்தையா கணேசன் (வயது-40) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். (ம-7,316)

## ஹெகலியவை பதவி நீக்குக

### ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

கெஹலிய ரம்புக்வெலவை சுற்றாடல் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கி சட்டத்தின் முன் நிறுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்று 11

## வழிபாட்டுத் தலங்களை பாதுகாப்பது அவசியம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

இலங்கைப் பிரஜைகள் என்ற வகையில், நாட்டின் உயரிய வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாப்பது நாட்டின் அனைத்துப் பிரஜைகளின் பொறுப்பாகும். 11



## நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம்

# விவாதத்துக்கு எடுக்க சபை அங்கீகாரம்

(கொழும்பு)

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமூலத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதா? இல்லையா? என்பது 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 ஆவது பிறந்த தினத்தில் 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## கிருஷாந்த் பாலபாஸ்கரன்



ஆண்டுகள் பத்து ஆனாலும் ஆறாது எங்கள் துயர் சிரித்த உன் முகம் என்றும் எம் கண்முன்னே வந்து செல்கிறது கிருஷாந்த் நீ இவ்வுலகை விட்டுச் சென்றாலும் வருடங்கள் பத்தானாலும் நாம் இவ்வுலகில் வாழும் வரை உன் நினைவுகள் மறையாது எம் உள்ளங்களில்.

என்றும் உன் நினைவுகளுடன்
அம்மா, அப்பா, தம்பி,
அம்மம்மா, மாமா

மலர்வு 24.01.1994 உதிர்வு 14.10.2014

(18734)

# பால் புரைக்கேறியதில் 13 நாட்களேயான பெண் குழந்தை மரணம்

பிறந்து 13 நாட்களேயான பெண் குழந்தை ஒன்று பால் புரைக்கேறி உயிரிழந்துள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மட்டக்களப்பு இருதயபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் போது இருதயபுரம் பகுதியைச்சேர்ந்த அஜித் குமார் அனோஜினி என்ற பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தையின் தாயாரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது அவர் சற்று மன நிலை பாதிக்கப்பட்டிருப்பதை கண்டறிந்த பொலிஸார் அவரை வைத்திய சாலையில் அனுமதித்ததுடன் சடலத்தை வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளனர்.

அதனையடுத்து நேற்று பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய போது குழந்தைக்கு பால் புரைக்கேறி உயிரிழந்துள்ளதாக சட்ட வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ம-7)


## லங்கா மஹால்(PVT) LTD

உள்நாட்டு. வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை



லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1800/=
ஜேர்மனி - 1700/=
கனடா - 2150/=
அவுஸ்திரேலியா - 2450/=
சுவிஸ் - 2050/=
இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(18739)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

40,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
077 8393 974


# அறிவித்தல்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்திற்கமைய வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக ஆளுகைக்குட்பட்ட வட்டாரம் 1 (கிராமசேவகர் பிரிவுகள் J/150, J/151, J/152)வட்டாரம் 2 (கிராமசேவகர் பிரிவுகள் J/154, J/155) வட்டாரம் 3 (கிராமசேவகர் பிரிவுகள் J/153, J/156 )வட்டாரம் 8 (கிராமசேவகர் பிரிவு J/144) ஆகிய பிரிவுகளிலுள்ள ஆதனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மீள்வரி மதிப்பீட்டு நிரலானது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகலில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. வரியிறுப்பாளர்கள் 01.02.2024 ஆம் திகதிவரை பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தமது மீள்மதிப்பீட்டு நிரலை பரிசோதிக்கலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.
(C-8191) 23.01.2024


நீங்கள் இராசாவாக

NLB ජාතික ලොතරැයි

මහජන සම්පත
மஹஜன சம்பத MAHAJANA SAMPATHA

ජයKing



25 இலட்சம் பரிசுகள்
மில்லியன் பரிசுகள்

ரூ.100,000
இலட்சம் பரிசுகள் 60 இற்கும் அதிகம்

சீட்டிழுப்பு ஜனவரி 30

(C-2223)

ஜனவரி 31 பரிசுக்கு பரிசு சீட்டிழுப்பு

கைச்சங்கிலி, தங்க காசுகள் மற்றும் பரிசு வவுச்சர்கள்

இன்றே விசேட மஹஜன சம்பத Jayaking லொத்தர்களைக் கொள்வனவு செய்யுங்கள்


# ஏற்க மறுக்கிறது இதயம்



## அமரர் "சிலம்பிசை"
## திருநாவுக்கரசு கார்த்திகேயன்

(பணிப்பாளர் - கலைத்துறை, அகில இலங்கை இளங்கோ கழகம்)

இருபத்தைந்து வருடங்களாக எமது கழகத்தோடு ஒன்றிச் செயற்பட்டு, கழகத்து மேடைகள், சிலப்பதிகார விழாக்கள், கலை நிகழ்வுகள் என அனைத்திலும் அக்கறையோடு பணியாற்றிய கழகத்து முன்னணிப் பேச்சாளர், செயற்பாட்டாளர், கலாசார உத்தியோகத்தர் "சிலம்பிசை" திருநாவுக்கரசு கார்த்திகேயனின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-8198)

அகில இலங்கை இளங்கோ கழகம்,
புலோலி,
யாழ்ப்பாணம்.

அமைப்பாளரும்
உறுப்பினர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2030 ஆம் ஆண்டளவில் புற்றுநோயின் தாக்கம் அதிகரிக்கும்

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**2030 ஆம் ஆண்டளவில் புற்றுநோயால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளதாக சுகாதார செயலாளர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.**

இந்நிலையில், இதய நோயினால் இறப்பவர்களை விட புற்றுநோயால் இறப்பவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"அபேக்ஷா பியச" புற்றுநோயாளர் சிகிச்சை பிரிவு திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புற்றுநோயாளர்களின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் நோய்த்தடுப்பு துறையை வலுப்படுத்துவது போன்று சிகிச்சை சேவைகளை வலுப்படுத்துவது மிகவும் அவசியம்.

இதன்படி நோய் தடுப்பு பிரிவில் நோயாளிகளை முன்கூட்டியே கண்டறிதல், தடுப்பு, உணவு முறை மாற்றங்கள், உடற்பயிற்சி என பல திட்டங்கள் இருக்க வேண்டும்.

அதற்காக தற்போதைய பணிகளை வலுப்படுத்த வேண்டும். மேலும், உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, பெரும்பாலான இறப்புகள் இதய நோயால் ஏற்படுகின்றன.

எனினும் 2030ஆம் ஆண்டுக்குள் புற்றுநோய் இறப்புகள் இதய நோயை மிஞ்சும் என்றும் சுகாதார அமைப்பு கூறுகிறது.

இந்நிலையில், மருந்துகளுக்கு மாத்திரம் 180 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மக்களின் பணத்தை முறையாக முகாமைத்துவம் செய்து தரமான மருந்துகளை வழங்குவது பொறுப்பும் கடமையுமாகும் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

## நாடு திரும்பினார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது 12 நாள் வெளிநாட்டு பயணம் முடிவடைந்ததையடுத்து நாடு திரும்பியுள்ளார்.

அவர் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததாக விமான நிலையத்திற்கு பொறுப்பான அதிகாரி உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த 12 நாட்களாக சுவிட்சர்லாந்தின் டாவோஸில் நடைபெற்ற பொருளாதார மாநாடு, உகண்டாவின் கம்பாலாவில் நடைபெற்ற 19ஆவது அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு மற்றும் தென் சீன உச்சி மாநாட்டின் மூன்றாவது உச்சி மாநாடு ஆகியவற்றில் ஜனாதிபதி ரணில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## வட்டி விகிதங்களில் மாற்றமில்லை-மத்தியவங்கி

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி, அதன் கொள்கை வட்டி விகிதங்களை தற்போதைய மட்டத்திலேயே தொடர்ந்தும் பேணுவதற்கு தீர்மானித்துள்ளது. நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை மீளாய்வு கூட்டத்தின் போது, குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (நி-5-6)

## ஊர்காவற்றுறைப் பகுதியில் விபத்துக்குள்ளான பேருந்துகள்

### நால்வர் மருத்துவமனையில்





(யாழ்ப்பாணம்)

யாழ்- ஊர்காவற்றுறை பகுதியில் இலங்கை போக்குவரத்து சபை பேருந்தும் தனியார் பேருந்தும் மோதி விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மூவர் சிறியளவான காயத்துடனும் யாழ். போதனாவில் சிகிச்சை பெற்று வருவதாக மருத்துவமனை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

மேலும்பேருந்தின் சாரதிகள்இருவரும் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை காலை 6.30 மணியளவில் பயணி ஒருவரை ஏற்றுவதற்காக இலங்கை போக்குவரத்து சபை பேருந்து வீதியில் நிறுத்தப்பட்ட நிலையில் பின்னால் வேகமாக வந்த தனியார் பேருந்து மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றது.

இதன்போது இரண்டு பேருந்துகளும் பலத்த சேதத்திற்கு உள்ளானதுடன் காயமடைந்தவர்கள் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6)

## இன்று முதல் அரச மருத்துவ சங்கம் தொடர் பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர், இன்று முதல் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

வைத்தியர்களுக்கான மேலதிக கொடுப்பனவை, இந்த மாதம் முதல் 35,000 ரூபாய் முதல் 70,000 ரூபாய் வரை அதிகரிப்பதாக அரசாங்கம் முன்னதாக உறுதியளித்திருந்தது.

எவ்வாறாயினும், குறித்த மேலதிக கொடுப்பனவை வழுங்காதிருப்பதற்கு தற்சமயம் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளதன் அடிப்படையில், தாம் இன்று முதல் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பு போராட்டை முன்னெடுக்கவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள்சங்கம்அறிவித்துள்ளது.

தாதியர்கள், ஆய்வக தொழில்நுட்ப நிபுணர்கள், பொதுசுகாதார பரிசோதகர்கள் என சுமார் 70இற்கும் அதிகமான மருத்துவ துறைசார் தொழிற்சங்கத்தினர் அண்மையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பணிப்புறக்கணிப்பு போராட்டங்களை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்ட மூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாராளுமன்றப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்ட மூலத்தை 2 ஆம் வாசிப்பு மீதான விவாதத்துக்கு சபையில் எடுத்துக் கொள்ள வேண்டாமென எதிர்ப்புத் தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது மக்களின் பேச்சு சுதந்திரத்தை ஒடுக்குவதாக தெரிவித்து சமூக ஆர்வலர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (நி-5-6)

## துப்பாக்கிச் சூட்டில் தேரர் பலி

(கம்பஹா)

கம்பஹா மல்வத்து ஹிரிபிட்டியவிலுள்ள விகாரைக்கு வந்த இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தேரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6)


# மணிவிழா வாழ்த்து

யா/கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயத்தில் பணியாற்றி இன்று (24.01.2024) மணிவிழாக் காணும்



திருமதி. மீரா மகேந்திரன்

SLTS I,

(B.A, Dip.in.Edu, MED)

1993–2024 (31 வருடங்கள்)

ஆசிரியை அவர்களை பாடசாலைச் சமூகம் சார்பாக பாராட்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

Best Wishes

(18730)

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்

யா/கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



கோண்டாவில் கிழக்கு

# திருவருள்மிகு ஸ்ரீ மகாகாளி அம்பாள் ஆலய

## புனராவர்த்தன அஷ்டபந்தன ஸ்வர்ணபந்தண சமர்ப்பண உத்தமோத்தம நவகுண்டபக்ஷ்ச பிரதிஷ்டா

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் – 24.01.2024

**24.01.2024 புதன்கிழமை காலை 5.45 மணி தொடக்கம் 7.37 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மகாகாளி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்திருக்கிள்றது**



### சிவஸ்ரீ சாமி. ஸ்ரீஸ்கந்தராஜாக் குருக்களின்
**ஆசிச்செய்தி**

இற்றைக்கு பலநூற்றாண்டுக்கு முன்னர் வேண்டியதை வேண்டிய நேரத்தில் அடியவர்க்கு திருவருள்பாலிக்கின்ற கோண்டாவில் கிழக்கில் அமர்ந்து இருக்கின்ற திருவருள்மிகு ஸ்ரீ மஹாகாளி அம்பாள் ஆலயம் ஆகும். இவ் ஆலயத்தில் பலபக்த கோடிகளின் பெரும் நிதி உதவியாலும் ஆலய நிர்வாக சபையின் விடா முயற்சியாலும் திருப்பணிகள் நடைபெற்று மஹா கும்பாபிஷேகம் என்கின்ற பெரும் சாந்தி விழா நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. இந்தக் கிரியைகள் அனைத்தும் பன்னிரண்டு ஆண்டுக்கு ஓர் முறை தான் நடைபெறும். இதில் கலந்து சிறப்பிக்கின்ற பிரதமகுரு, ஏனைய குருமணி கள், உதவியாளர்கள், பணத்தை அள்ளிக்கொடுத்த பெருங் கொடைவள்ளல்கள், நிர்வாகத்தினர்கள், எல்லா பக்த அடியார்கள், ஆலயம் நல்ல விதமாய் இருக்க வேணும் என்று நினைத்து பல வழிகளிலும் உதவிய அன்பான உள்ளங்களுக்கும் எம் பெருமாட்டி திருவருள்மிகு ஸ்ரீ மஹாகாளி அம்பாள் எல்லாவற்றையும் கொடுத்து அருள்புரிய வேண்டும் என்று அம்பாளின் பாதகமலத்தை வணங்கிப் பிரார்த்திப் போமாக.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சிவஸ்ரீ சாமி. ஸ்ரீஸ்கந்தராஜாக் குருக்கள்.**

(C-8195)

### கோண்டாவில் அற்புதநர்த்தன விநாயகர் கோவில் பிரதம குருவின்
**ஆசிச்செய்தி**

சிவபூமி குபேரபூமி எனப் போற்றப்படும் புகழ் பெற்ற இலங்கா தீவின் வடபால் யாழ். நகரிலே சைவமும் தமிழும் சகல செல்வமும் தழைத்து சீரும் சிறப்பும் பெற்ற கோண்டாவில் கிழக்கு திருவருள்மிகு ஸ்ரீ மகாகாளி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெறுவதை இட்டு மகிழ்ச்சி அடைகிறேன். மஹாகும்பாபிஷேகம் செய்கின்ற பணியானது அளப்பரியது. மேலும் இவ்ஊர்மக்கள் **"இந்த பணி செய்துகிடப்பதே"** அன்னையின் அருள் வேண்டி எல்லா ஜீவராசிகளும் நீண்ட ஆயுளோடு சுகமாக வாழ எல்லாம்வல்ல அற்புதநர்த்தன விநாயகப் பெருமானையும் அன்னையையும் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

"லோகா சமஸ்தா சுகினோபவந்து"
சுபமஸ்து

**சிவஸ்ரீ சிவ. கதிர்காமநாதக் குருக்கள்.**

### செஞ்சொற் செல்வரின்
**ஆசிச்செய்தி**

**" அம்பிகையைச் சரணடைந்தால் அதிகம் வரம் பெறலாம்"**
பாரதியார்

கோண்டாவில் கிழக்கு திருவருள்மிகு ஸ்ரீ மகாகாளி அம்பாள் ஆலயம் புனருத்தாரனம் செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து ஆனந்தமடைகிறேன். ஆலயத்தை காலம் தவறாது காத்துவரும் பக்தர்கள் பாராட்டுக்குரியவர்கள். புதிய திருப்பணிகளை நிறைவேற்றிப் புதுப்பொலிவுடன் ஆலயம் மிளிர்வது திருவருளே. எங்கும் எதிலும் நிறைந்த அன்னை பராசக்தி, அரச மரத்தடியில் அருளாட்சி புரிந்த இடம் பெருங் கோவிலாக இன்று மாற்றம் பெற்றிருப்பது அன்னையின் அருளே.

திருக்கோயில்களை புனிதமாகப் பேணி எம் தலைமுறையை இறைநம்பிக் கையோடு வளர்க்க வேண்டியது எம் தலையாய கடமையாகும். ஆலய பரிபாலன சபையினரின் நன்முயற்சிகள் தொடர ஆசிகூறி வாழ்த்துகிறேன். மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்று திருக்கோவில் என்றும் மிளிரத் துர்க்கை அம்பாளை வேண்டி அமைகிறேன்.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்.**
**தலைவர் ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம் – தெல்லிப்பழை.**

### மகா காளி அம்பாள் ஆலய பிரதம குருவின்
**ஆசிச்செய்தி**

சுவர்ண பூமியாகத் திகழும் ஈழமணித் திருநாட்டில் வடபால் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கல்வியாளர்கள் சிறக்கும் புண்ணியபதியாம் கோண்டாவில் கிழக்கு நாகபூசணி அம்பாள் வீதியின் அருகில் அரசமர தல விருட்சத்தில் அமர்ந்து அடியவர்கள் துன்பங்களை அகற்றி நல்லாட்சி புரிகின்ற நாயகியாக அருள் பாலிக்கும் அன்னை ஸ்ரீ மகாகாளி அம்பிகைக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் 24.01.2024 ஆம் நாள் புதன்கிழமை காலை கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. அம்பிகையின் கும்பாபிஷேகத்தில் எல்லா அடியவர்களும் பேரின்பம் பெற்று அம்பிகையின் திருவருளைப் பெற்று பெருவாழ்வு வாழ நல்லாசிகள் கூறுகின்றேன்.

மகா காளி அம்பாள் ஆலய பிரதம குரு
**சிவஸ்ரீ பே. நிருஷனக் குருக்கள்.**

நாகபூசணி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

அடியார்கள் கும்பாபிஷேகத்திற்குத் தேவையான சிவத்திரவியங்கள் பால், தயிர், இளநீர், கற்பூரம், தேங்காய், எண்ணெய்.பூக்கள், பூமாலை மற்றும் அபிஷேகத்திரவியங்களை வழங்கி எம்பெருமாட்டியின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

மண்டலாபிஷேகம் 48 நாட்கள் நடைபெறும் பூர்த்தி நாளன்று 1008 சங்காபிஷேகம் நடைபெறும்.

சர்வே ஜனகா சுகினோ பவந்து.
சுபம்

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபையினரும்
உபயகாரர்களும் இந்து இளைஞர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பிரதேசசபைக்கு சொந்தமான கடைகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி மனு கோரல் அறிவித்தல்

**கேள்வி விண்ணப்ப விநியோக காலம்:24.01.2024 தொடக்கம் 07.02.2024 வரை**
**அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரை**
**கேள்வி மனுக்கள் ஏற்கும் இறுதித் திகதி:- 08.02.2024 மு.ப 10.00 மணி வரை**
**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி:- 08.02.2024 மு.ப 10.30 மணிக்கு**

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட கைதடி பொதுச் சந்தைக்கு அருகில் கைதடி மானிப்பாய் வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சாவகச்சேரி பிரதேசசபைக்கு சொந்தமான **மேல் தளத்திலான கடைத்தொகுதி இரண்டு** வாடகைக்கு விடுவதற்கான கேள்வி மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்வி விண்ணப்ப விநியோக காலத்தில் குறித்த கடைகளுக்கான தனித்தனியான கேள்வி விண்ணப்பங்களை சாவகச்சேரி பிரதேசசபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்கள் A9 வீதி, கொடிகாமம் எனும் முகவரியிலுள்ள சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளித்து கேள்விமனுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

கேள்வி விண்ணப்பங்களைப் பெற விரும்புபவர்கள் தத்தமது தேசிய அடையாள அட்டை, கிராம சேவகரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் மற்றும் குடும்ப வதிவிட அட்டை ஆகியவற்றின் மூலப்பிரதியையும் நிழற்பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும். (நிழற்படப் பிரதிகள் உறுதிப்படுத்திய பின்னர் மூலப்பிரதிகளை மீளப் பெற்றுக்கொள்ளலாம்)

கேள்வி மனுக்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம்."** என்ற விலாசத்திற்கு நேரடியாக/தபாலிலும் இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற விலாசத்திற்கு நேரடியாக/பதிவுத் தபாலிலும் அனுப்பி வைக்க வேண்டும். அத்துடன் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் மூலப்பிரதி/இணைப்பிரதி, கடைத்தொகுதி இலக்கம் என்பன தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். **08.02.2024 மு.ப 10.00 மணிக்குப்** பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்தவித காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எந்தவொரு கேள்வி பத்திரங்களையும் எந்தவொரு கட்டத்திலும் எதுவித காரணம் குறிப்பிடாது முழுவதுமாகவோ பகுதியளவாகவோ ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதம் பெற்றுக் கொண்ட திகதியிலிருந்து 07 (ஏழு) நாட்களுக்குள் கேள்வித் தொகையின் முழுத்தொகையையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும். இதர மேலதிக விபரங்கள், நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் தொடர்பான விளக்கங்களை சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

| கடை இலக்கம் /விபரம் | அளவு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி மனு வைப்புப் பணம் (மீளளிக்க கூடியது) | கேள்வி விண்ணப்ப கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| UF- 5D (மேல்த்தளம்) | 276 sq ft | 1,700,000.00 | 3,500.00 | 17,000.00 | 2,000.00 |
| UF- 5E (மேல்த்தளம்) | 276 sq ft | 1,700,000.00 | 3,500.00 | 17,000.00 | 2,000.00 |

க. சந்திரகுமார்,
தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
சாவகச்சேரி பிரதேச சபை.

24.01.2024 (சி-8193)

# சீனாவில் நிலநடுக்கம்



(பீஜிங்)

சீனாவின்மேற்குசின்ஜியாங் பகுதியில் சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அந்த நாட்டு அரசஊடகம்செய்தி வெளியிட்டுள்ளது. இந்த நில நடுக்கம் ரிக்டர் அளவில் 7.2 ஆக பதிவாகி உள்ளது. நிலநடுக்கத்தில் 6 பேர் காயமடைந்ததுடன் 120 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாக சீன நிலநடுக்க வலையமைப்பு மையம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், சீனாவை தொடர்ந்து இந்திய தலைநகர் டில்லியிலும் நள்ளிரவில் நிலஅதிர்வு உணரப்பட்டுள்ளது. எனினும் அதிர்ஷ்டவசமாக டில்லியில் எந்த சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# ஹவுதி ஆயுத களஞ்சியம் மீது விமானத்தாக்குதல்

(சனா)

ஏமனில் ஹவுதி அமைப்புகளுக்கு சொந்தமான நிலத்தடியில் அமைந்துள்ள ஆயுத சேமிப்புக் களஞ்சியம் உட்பட '8 இடங்களை இலக்கு வைத்து அமெரிக்க, பிரித்தானிய படையினர் நேற்று முன்தினம் மீண்டும் விமான தாக்குதல் நடத்தியுள்ளனர்.

செங்கடலில் பயணிக்கும் கப்பல்களை குறித்து வைத்து தாக்க ஹவுதி அமைப்பினர் பயன்படுத்தும் ஏவுகணை, கண்காணிப்புக் கட்டமைப்பையும் இலக்கு வைத்து அமெரிக்க மற்றும் பிரித்தானிய படையினர் இந்த தாக்குதல் மேற்கொண்டதாக அமெரிக்க பாதுகாப்பு இராஜாங்க செயலகம் தெரிவித்துள்ளது.

காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்திவரும் நிலையில் பாலஸ்தீனர்களுக்கு ஆதரவாக தாம் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக ஹவுதி அமைப்பு தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியா, பஹ்ரேன், கனடா, நெதர்லாந்து ஆகியவற்றுடன் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தத்தை அடுத்து அமெரிக்க, பிரித்தானிய படையினர் 8 முறை தாக்குதல்கள் நடத்தியுள்ளதாக ஆறு நாடுகள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச வர்த்தகத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ள ஹவுதி அமைப்பினரின் பலத்தை தகர்த்து அழிக்கவே இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

ஹவுதி அமைப்பினர் சர்வதேச கப்பல் போக்குவரத்துக்கு தடையாக இருந்து வருவதாகவும் இதன் காரணமாக சர்வதேச ரீதியில் பணவீக்கம் ஏற்படும் ஆபத்து எழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-5-6)

# இராசிபலன்

24.01.2024
தை 10, புதன்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 10.43 மணிவரை

திருவாதிரை முற்பகல் 7.37 மணிவரை
சுபநேரம் -5.06-.6.36 மணிவரை
இராகுகாலம்-12.36-2.06 மணிவரை

சந்திராஷ்டமம்
அனுசம்.

வளவன்

**மேஷம்**
நீண்டநாளைய பிணக்குகளில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு

**கடகம்**
குடும்பத்தினரை அனுசரித்து செல்ல வேண்டிய நாள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள்.

**துலாம்**
பொருளாதார வழிவகை உயர வழிவகை செய்வீர்கள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்காக இருந்தவர்கள் விலகுவார்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்**
மறைமுக எதிர்ப்புகள் மாறும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்**
நிதி நிலை உயரும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வாக்கு மேன்மையுண்டு, போசன சுகமுண்டு

**சிம்மம்**
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்**
சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காண வேண்டிய நாள் வழிபாட்டால் அமைதி கூடும், வரவும் செலவும் சமமாகும் நாள், பிரயாண பயமுண்டு

**கும்பம்**
வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.

**மிதுனம்**
இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், மன அமைதி தரும் வகையில் பயணமொன்று உருவாகலாம், இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்,

**கன்னி**
அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வருவார்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு**
குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அரசு வழியாக அனுகூலமுண்டு, உறினர் சிலரை தேடிச் சென்று சந்திப்பீர்கள்,

**மீனம்**
தொழில் ரீதியாக வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும், உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், எண்ணியவை எளிதில் நிறைவேறும் நாள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'வடதாரகையின்' திருத்த வேலைகளை விரைவுபடுத்துமாறு பணிப்பு



(யாழ்ப்பாணம்)

வடதாரகை படகின் திருத்த பணியினை விரைவுபடுத்துமாறு யாழ். மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன், வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கு பணிப்புரை வழங்கினார்.

கச்சதீவு முன்னேற்பாட்டு கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற போதே அவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், குறிகட்டுவான் - நெடுந்தீவு சேவையில் ஈடுபடும் வடதாரகை படகானது அண்மைய நாட்களில் திருத்தப் பணிக்காக காங்கேசன்துறை கடற்படை முகாமில் நிறுத்தப்பட்டுள்ளது.

வழமையாக கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தில் பங்கேற்கும் பக்தர்களின் கடற் பயணத்திற்கு வடதாரகை படகு ஒத்துழைப்பினை வழங்கியிருந்த நிலையில் எதிர்வரும் மாதம் கச்சதீவு அந்தோனியார் உற்சவம் இடம்பெறவுள்ள நிலையில் பக்தர்களை கச்சதீவுக்கு ஏற்றிஇறக்கும் பணியில் ஈடுபடுவதற்கு வடதாரகை படகு மிகவும் முக்கியமானது.

குமுதினி படகினை பயன்படுத்தினால் நெடுந்தீவிற்கான போக்குவரத்து பாதிக்கும்.

இம்முறை உற்சவத்தின் போது வடதாரகை சேவைக்கு அமர்த்தர்படாதவிடத்து கச்சதீவு செல்லும் பக்தர்களின் கடற்பயணத்தில் பெரும் இடர்பாடான நிலை காணப்படும்.

எனவே வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இதனைப் புரிந்து கொண்டு கச்சதீவு ஆலய உற்சவத்திற்கு முன்னர் வடதாரகை படகின் திருத்த பணியினை நிறைவு செய்து சேவையில் ஈடுபடுத்துமாறு அறிவுறுத்தினார். (நி-5-6-33)

# திருமறைக் கலாமன்றில் நுண்கலை வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 2024 ஆம் ஆண்டுக்கான நுண்கலைப் புதிய வகுப்புகள் அனைத்தும் தைப்பூச தினமான நாளை 25ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் ஆரம்பமாகவுள்ளன.

இவற்றைப் பயில விரும்புவோர் கலைத்தூது அழகியற் கல்லூரியில் நேரடியாக விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு 021 222 9419 அல்லது 021 222 7955 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# 21 வதிவிடங்களுக்கு சுதுமலையில் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

சுதுமலை பகுதியில் கடந்த வாரம் 21 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில், 13 பேர் 10 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் ஆவார்கள். இந்நிலையில் குறித்த பகுதிகளில் பொது சுகாதார பரிசோதகர் ம.ஜெயபிரதீப் தலைமையில் அப்பகுதியில் டெங்கு களத்தரிசிப்பில் ஈடுபட்டனர்.

அதன் போது டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான சூழலை வைத்திருந்த 23 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை துண்டு வழங்கப்பட்டதுடன், நுளம்பு குடம்பிகள் காணப்பட்டவளாக குடியிருப்பாளர்கள் நால் வருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் மன்றில் முன்னிலையான மூவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து, தலா 4 ஆயிரத்து 500 ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது. மன்றில் முன்னிலையாகாத குடியிருப்பாளருக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை நுளம்பு பரவ கூடிய சூழல் காணப்பட்ட வெற்று காணி உரிமையாளர்களுக்கு, அக்காணிகளை துப்புரவு செய்வதற்கு 7 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (நி-5-6-33)

# குளவி கொட்டுக்கு இலக்கான மூவர் மருத்துவமனையில்

## முக்கொம்பனில் சம்பவம்

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி முக்கொம்பனில் குளவிகள் கொட்டியதில் மூன்று பேர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. முக்கொம்பன் கிராமத்தில் குளவிக் கூடுகள் கூடுதலாக காணப்படுவதாகவும் குளவிகளினால் அடிக்கடி தாக்குதல்களுக்கு உள்ளாகும் சம்பவம் நிகழ்ந்த வண்ணமும் உள்ளன. இதனை அழிப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராம மாதர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (நி-5-6-350)

# டெங்கு பெருக ஏதுவான சூழல் வைத்திருந்தோருக்கு எதிராக வழக்கு

(கரணவாய்)

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதியில் சிவப்பு அறிவித்தலை கருத்தில் கொள்ளாது டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏற்ற வகையில் சூழலை வைத்திருந்தோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட அதிகாரிகளால் வீடுகள், வர்த்தக நிலையங்கள், அரச அலுவலகங்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

இதன்படி கடந்த 18ஆம் திகதி நெல்லியடி பொதுச் சுகாதார பிரிவில் கல்யாண மண்டபம் மற்றும் வர்த்தக நிலையம் போன்றவற்றின் பின்புறங்கள் அதிகளவான நுளம்பு பெருக்கம் காணப்பட்டதற்கு இருவழக்கும் கரணவாய் பொதுச் சுகாதார பிரிவில் ஒருவழக்கும் துன்னாலை பொதுச் சுகாதார பிரிவில் 2 வழக்கும் அல்வாய் பொதுச் சுகாதார பிரிவில் ஒரு வழக்குமாக 6 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (நி-5-6)

# நெடுந்தீவு கடற்பரப்பில் 6 இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட 6 தமிழக கடற்றொழிலாளர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்த கடற்படையினர், இலங்கை கடற்பரப்பினுள் அத்து மீறி நுழைந்து கடற்றொழில் ஈடுபட்டு இருந்த தமிழக கடற்றொழிலாளர்களை கைது செய்ததுடன், இரண்டு படகுகளையும் மீட்டு இருந்தனர்.

கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களை கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் ஊடாக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (நி-5-6-33)


சிவமயம்

பாஷாண உத்வாசன, சபிண்டீகரண அழைப்பிதழ்

கடந்த 16.01.2024 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

ஸ்ரீமதி சங்கரி மதிரூபக்குருக்கள்



அவர்களின் பாஷாண உத்வாசனம் 26.01.2024 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு இடம்பெற்று, தொடர்ந்து மு.ப 10.00 மணிக்கு சபிண்டீகரணக் கிரியைகள் இடம்பெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

அரசடிப்பிள்ளையார் கோவிலடி, நாயன்மார்கட்டு, நல்லூர். (சி-8192) தகவல் குடும்பத்தினர்.


# கச்சதீவு திருவிழா 4 ஆயிரம் பேருக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த மஹோற்சவ முன்னேற்பாட்டுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23 மற்றும் 24ஆம் திகதிகளில் கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த மஹோற்சவம் சிறப்பாக இடம் பெறவுள்ள இந்நிலையில் குறித்த ஏற்பாடுகள் தொடர்பில் ஆராயும் முன்னேற்பாட்டு கூட்டத்தில், [illegible] இலங்கையிலிருந்து 4000 [illegible] இந்தியாவில் இருந்து 4000 பக்தர்களும் பங்குபற்ற அனுமதிப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பங்குபற்றுவோருக்கான சுகாதாரம், போக்குவரத்து உட்பட அடிப்படை வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் உணவு போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

குறித்த முன்னாயத்த கூட்டத்தில் யாழ். இந்திய துணைத் தூதுவராலய அதிகாரிகள், நெடுந்தீவு பிரதேச செயலர், நெடுந்தீவு பங்குத்தந்தை, யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர், கடற்படையின் பிராந்திய பொறுப்பதிகாரி, பொலிஸ் உயரதிகாரிகள், இராணுவ உயரதிகாரிகள் மற்றும் துறைசார் திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-5-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மூரில் நத்தைகளின் எதிர்பாராத இனப்பெருக்கம்: கவனம் தேவை




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,
விவசாய பீடம்

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

நாம் வாழும் சூழற்றொகுதியில் எம்மோடு சேர்ந்து வாழுகின்ற உயிரினங்கள் அவ்வப்போது தமது இனத்தைப் பெருக்கி தத்தமது எண்ணிக்கையை தமக்கு தேவையான வழியில் பெருக்கிக் கொள்கின்றன. இது இயற்கையின் நியதியென்றாலும் சிலவேளைகளில் குறிப்பிட்ட சில உயிரினங்களின் பெருக்கம் எமக்கு பல நெருக்குதல்களை கொடுப்பனவாக அமைந்து விடுகின்றன. இந்த வகையில் நத்தைகள் ஒரு வகையில் பயிர்களில் பீடைகளாக இருப்பதுடன் தாவரங்களின் இலைகளை உண்டு சேதத்தை ஏற்படுத்த வல்லன. உடலைச் சுற்றிவன் கோது இருந்தாலும் தலையை வெளியில் நீட்டி அதனது உணர் கொம்புடன் வெளிவந்து உண்ணுவதனை காணலாம்.

மொலஸ்கா தொகுதியைச் சேர்ந்த நத்தைகள் (snails) வழக்கமாக தாவரவுண்ணிகள். அல்காக்கள், தாவரங்களின் இலைப் பகுதிகள் மற்றும் மென்தண்டு பகுதிகள், தோற்பகுதிகள் மற்றும் காளான்கள், இலைத்தாவரங்கள் என்பனவற்றின் மேற்பரப்பை கடினமான வாயுறுப்பினால் சுரண்டி பெரிய துணிக்கைகளை சிறியனவாக வெட்டி பின்னர் மென்மையான ஆயிரக் கணக்கான மென்வாயுறுப்பினால் உணவை சுவைத்து உண்ணும். இதனது வாயுறுப்பு கைற்றினால் (Chitin) ஆனதென்றாலும் கடினமான



வாயுறுப்பினை வைத்து உணவு வெட்டியுண்ணும் தன்மை உடையது. பூச்சிகளிலும் கைற்றினாலான வாயுறுப்புக்களே காணப்படுகின்ற போதிலும் நத்தை போன்று கோதைவிட மென்மையான உடற்பாகங்களைக் கொண்ட அங்கியில் இவ்வாறான கைற்றினின் தடிப்பு காணப்படுவது உணவை மென்று உண்ணும் தன்மையைக் கொண்டுள்ளதாக் உள்ளது.

நத்தைகள் முட்டையிட்டு இனப்பெருக்கினாலும் நத்தைகளில் ஆண் மற்றும் பெண் இனப்பெருக்க தொகுதிகள் ஓரங்கியில் காணப்படும் தன்மை (Hermaphrodites) காணப்படுகின்றது. இதன் மூலம் இரு பருவமடைந்த நத்தைகள் சந்திக்கும் போது இரண்டினதும் ஆண் இனப் பெருக்க தொகுதியிலிருந்து விந்து மற்றையதன் பெண் இனப்பெருக்க தொகுதிக்கு கடத்தப்பட்டு இரண்டுமே கர்ப்பமுறும் தன்மை காணப்படுகின்றது. இந்நிலைமை மண்புழுக்களிலும் காணப்படுகின்றதனை காணலாம். இவ்வாறாக இரு இனப்பெருக்க தொகுதிகளும் ஒன்றிலேயே காணப்படுவதனால் இவற்றினது இனப்பெருக்கம் சில வேளைகளில் அளவுக்கு மீறி அதீத நிலையை அடைந்து விடுகின்றன.

அப்படியொரு நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளதாக காண முடிகின்றது. வீடுகளில், பாதையோரங்களில், கடைப்பகுதிகளில் ஈரப்பதன் அதிகமாக உள்ள இடங்களில் குறிப்பாக சமையலறை, குளிப்பறை, கழிவறை, தண்ணீர்த் தொட்டி போன்றன இருக்கின்ற இடங்களில், வீட்டுத் தோட்டங்களில் தண்ணீர் தேங்கியுள்ள இடங்களில் நத்தைகளின் பெருக்கம் அளவுக்கதிகமாக காணப்படுவதும் அவை ஊர்ந்து வீடுகளுக்குள்ளே சமையலறைக்குள், உணவுக்குள் இன்னும் படுக்கையறைகளுக்குள் வருவதனையும் அவதானிக்கலாம். சிறுபிள்ளைகள் உள்ள வீடுகளில் அவர்களை தீண்டாதவாறு பார்த்துக் கொள்ளுதல் முக்கியம். பாத்திரங்கள் எதுவென்றாலும் அவற்றை அவதானித்து நன்றாக கழுவி பயன்படுத்தல் அவசியம். இலைக்கறி தாவரங்கள் வைத்திருக்கும் பாத்திரங்கள் மற்றும் இலைக் கறிகளை நன்றாக கழுவி பயன்படுத்துதல் அவசியம்.

வேலிகளில் உள்ள தாவரங்களில் நத்தைகள் மேல் நகர்ந்து உச்சிப் பகுதிகளில் அனைத்தும் ஒன்றிணைந்து காணப்படுவதனை அவதானிக்கலாம். இது நத்தைகளின் ஒருவகை இயல்பாக இருப்பதனாலும் மேல் நோக்கிநகரும் தன்மையை பூச்சிகள், நத்தைகள் மற்றும் ஏனைய உயிரினங்களில் காணப்படுவதனாலும் இதனை பயன்படுத்திநாம் நத்தைகளை அவதானிக்கவும் இன்னும் கட்டுப்படுத்தவும் எத்தனிக்கலாம். நத்தைகளினால் அதிகமானபாதிப்புகள் இல்லையென்று கூறிவிடமுடியாது. அழகுத் தாவரங்களை பெருமளவில் வளர்க்கும் நாற்றுமேடைகளில் இவற்றின் பெருக்கம் அதிகரிக்க வாய்ப்புக்களுண்டு. இனப் பெருக்கம் அதிகமானால் சூழல் அவற்றின் பெருக்கத்துக்கு சாதகமானால் இவற்றினை கட்டுப்படுத்துவது கடினமாகும். இவ்வாறான அழகுத் தாவரங்களை சாடிகளில் வளர்க்கும் இடங்களில் இலுப்பம் பிண்ணாக்கு இனை தாவரத்தின் அடிப் பகுதியில் இடுவதன் மூலமும் நத்தைகள் அந்த செடிகளை நோக்கி நகராமல் அவற்றை விரட்டும் தன்மையை காணலாம்.

உப்பினை கரைத்து அந்த தண்ணீரில் பாத்திரங்கள் மற்றும் இலைக் கறிகளை கழுவினால் இலகுவாக நத்தை போன்றன உள்ளிருந்தால் விழுந்து விடும். உப்புக்கரைசலை நத்தைகள் பெருகும் இடங்களில் தெளிப்பதன் மூலமும் நத்தைகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம். உள்ளிக் கரைசலை தெளிப்பதன் மூலமும் நத்தைகளின் வருகையை கட்டுப்படுத்தலாம்இதனைவிட களிமண்ணை சல்பூரிக் அமிலத்தில் பரிகரித்த பின் வரும் ஊக்கப்படுத்தப் பட்டகளியை (பவுடர் வடிவிலிருக்கும்) நத்தைகள் அதிகமாக உள்ள இடங்களில் விசிறுவதன் மூலமும் அல்லது சுவறுவதன் மூலமும் நத்தைகளை கட்டுப்படுத்த முடியும்.

ஊக்கப்படுத்தப்பட்டகளி (Activated clay) இலுள்ள மூலக்கூறுகள் மிகவும் கூரானதாக காணப்படுவதனால் அது நத்தையின் மென்பகுதிகளில் படும்போது அப்பகுதிகளில் கீறல் ஏற்பட்டு காயங்கள் உருவாக காரணமாகி விடும். இதன் மூலமும் நத்தைகளை கட்டுப்படுத்த முடியும் என பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றது. நத்தைகள் பெருகும் இடங்களை சுத்தம் செய்வதும் அவற்றை சேகரித்து அழிப்பதும் உப்புக்கரைசல், உள்ளிக் கரைசல் மற்றும் ஊக்கப்படுத்திய களி என்பனவற்றை பயன்படுத்தி நத்தைகளின் வருகையைக் கட்டுப்படுத்தலாம்.

# இன்று ஒரு தகவல் 15



தென்கச்சி கோசுவாமிநாதன்

## முதுகு வலி

"சார் என் முதுகு வலிக்குது! என்ன செய்யலாம்?" என்று கேட்டார் ஒருத்தர். "முதுகு என்று ஒன்று இருந்தால் முதுகு வலி என்று ஒன்றும் இருக்கத்தான் செய்யும். அதுக்குப் போய் கவலைப்பட்டுக்கொண்டு இருக்காதீர்கள். விட்டுத்தள்ளுங்க" என்றார் இன்னொருத்தர்.

இவருக்கு என்ன? சும்மா சொல்லிவிட்டுப் போறவர் தானே! வலி என்பது அவங்க அவங்களுக்கு வந்தால்தான் அதோட அவஸ்தை புரியும்!

இந்த முதுகு வலி இருக்கே... இது சாதாரணமாக நடுத்தர வயது உள்ளவர்களுக்கு வருகிறது.. அதே மாதிரி வயசானவங்களுக்கும் வருகிறது. இது ஏன் வருகிறது? எப்படி வருகிறது? என்பதைப் பற்றி ஓர் ஆராய்ச்சி!

முதுகுவலிக்கும் காலுக்கும் சம்பந்தம் உண்டு என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். மனிதனுக்கு எத்தனைக் கால்? என்று ஒரு கேள்வி கேட்டால், கொஞ்சம் இருங்க எண்ணிப் பார்த்திட்டு சொல்கிறேன் என்று யாரும் சொல்வதில்லை! மனிதனுக்கு இரண்டு கால் என்பது எல்லோருக்கும் தெரியும்!

ஆனால் இந்த இரண்டு கால் நீளமும் வித்தியாசமா இருக்கும் என்று சொன்னால் அதை நம்புவது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கு! ரொம்ப பேருக்கு இரண்டு கால் நீளமும் ஒரேஅளவாக இருப்பதில்லை.

இரண்டு கால்களுடைய உயரத்துக்கும் கொஞ்சம் வித்தியாசம் இருக்கு. கொஞ்சம் வித்தியாசம் என்றால் எவ்வளவு? அதிகபட்சமா ஒரு சென்ரிமீற்றர் வரைக்கும் இந்த வித்தியாசம் இருக்கும்!

இப்படி நான் சொன்னதும் உடனே நீங்க "அதை அளந்து பார்த்தீர்களா" என்று கேட்பீர்கள். நான் அளந்து பார்க்கவில்லை ஒத்துக்கொள்கிறேன்.

அவுஸ்திரேலியாவிலே இருக்கிற சில விஞ்ஞானிகள் அளந்து பார்த்திருக்கின்றார்கள். அவர்கள் இது சம்பந்தமாக சில ஆராய்ச்சியும் பண்ணிப் பார்த்திருக்கின்றார்கள். அதற்குப் பிறகுதான் இந்த உண்மையை சொல்லியிருக்கிறார்கள்.

அது சரி! இரண்டு காலுக்கும் உயரத்திலே கொஞ்சம் வித்தியாசம் இருப்பதனாலே என்ன கஷ்டம்? என்று நினைக்கிறது தப்பு!

ஏன் என்றால் அது தான் முதுகு வலிக்கே காரணமாம்! "முதுகு வலிக்கும் கால் உயரத்துக்கும் முடிச்சுப் போடுகிறேன் என்கிறீர்களா அதுக்குக் காரணம் இருக்கு!

கால்களுக்கு இடையே உள்ள உயர வித்தியாசம் முதுகுத் தண்டுலே ஒரு வளைவை உண்டாக்கி விடுகிறது! அந்த "வளைவு" தான் முதுகு வலியை உண்டாக்கி விடுகிறது! பொதுவாக பாதி வயதுக்கு மேலே "முதுகு வலி", வருகிறவர்களுக்கு இதுதான் காரணமாக இருக்கும்! சரி! காரணம் தெரிந்து போய்விட்டது.

அப்படி என்றால் இந்த "முதுகு வலி" வராமல் இருப்பதற்கு ஏதாவது வழி உண்டா? உண்டு! காலிலே இருக்கிற உயர வித்தியாசத்தை சரி செய்துவிட்டால் முதுகு வலியும் சரியாகி விடும்! எப்படி சரி பண்றது? உயரமாக இருக்கிற காலை ஒரு சென்ரி மீற்றர் வெட்டி எடுத்து விடலாமா? அப்படி செஞ்சா முதுகு வலியை விட கால் வலியே பெரிதாகப் போய்விடும்! அது நடக்கிற காரியம் இல்லை!

சரி! வேறு வழி என்ன? உயரம் குறைவாக உள்ள காலிலே பொருத்தமாக ஒரு கட்டையை செருப்போட சேர்த்துப் போட்டுக்கொண் டால் உயரம் சரியாகி விடும்!

சின்ன வயதிலேயே இப்படி செய்து கொண்டால் பின்னர் வயதான காலத்திலே முதுகுத்தண்டு வளையாது! முதுகுவலியும் வராது!

வயதானதுக்கு பிறகுகூட முதுகுவலி வந்தவர்கள் இதுமாதிரி செருப்பும் போட்டு நடந்து பார்த்திருக்கிறார்கள். என்ன ஆச்சு தெரியுமா?

முதுகுவலி கொஞ்சம் கொஞ்சமா ஆரம்பிச்சுட்டுது! அதனாலே இதை படிக்கிறவங்க யாருக்காவது முதுகுவலி இருந்து... அதற்கு இதுவரைக்கும் என்ன காரணம் என்று தெரியாமல் இருந்தால் அதற்கு நான் சொன்னதுதான் இருக்கும்...

அப்படி இருந்தால் அதற்கு நீங்களே பரிகாரம் தேடிக் கொள்ளலாம். கால் சரியாக இருந்தால் முதுகும் சரியாக இருக்கும். நடக்கும் போது நிமிர்ந்து நடவுங்கள்.

ஒருத்தர் இருந்தார்... அவர் அளவுக்கு அதிகமா எதுக்கும் ஆசைப்படுவதே இல்லை! இருக்கிறது போதும் என்று நினைக்கிறவர்!

ஆண்டவனே அவரிடம் நேரிலே வந்து "உங்களுக்கு கால் எவ்வளவு நீளம் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள்" எனறு கேட்டாராம்! அதுக்கு இவர் "அதிகமா ஒன்றும் வேண்டாம் என் உடம்பிலிருந்து பூமியைப் போய் தொடும் அளவுக்கு இருந்தால் போதும்!" என்றாராம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 386





இளவரசர் சற்றுச் சிந்தனையில் ஆழ்ந்திருந்து விட்டு, "மண்ணாசை மிகப் பொல்லாதது. இராஜ்யத்தின் பேரில் உள்ள ஆசையினால் இவ்வுலகில் என்னென்ன பயங்கரமான பாவங்கள் நடந்திருக்கின்றன? இன்று சிம்மகிரிக் கோட்டைக்குப் போயிருந்தேன் அல்லவா? அந்தக் கோட்டையின் வரலாறு உங்களுக்குத் தெரியுமா?" என்றார்.

"நான் கேட்டதில்லை" என்றான் வந்தியத்தேவன்.

"சொல்கிறேன், கேளுங்கள்! சுமார் ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பு இந்த இலங்கைத் தீவைத் தாதுசேனன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். ஒருவன் பெயர் காசியப்பன் இன்னொருவன் மகல்லன். தாதுசேனனின் சேனாபதியும் காசியபனும் சேர்ந்து சதியாலோசனை செய்தார்கள். காசியபன் தன் சொந்தத் தந்தையைச் சிறையில் அடைத்து விட்டுச் சிங்காதனம் ஏறினான். மகல்லன் கடல் கடந்து தமிழ்நாட்டுக்கு ஓடிப் போனான். சில நாளைக்குப் பிறகு தாதுசேனனின் சிறையைச் சுற்றிச் சுவர் எழுப்பி அடைத்து அவனைக் கொன்று விட்டார்கள். இந்தக் கொடூர பாவத்தைச் செய்த காசியபனுக்குத் தன் சகோதரன் மகல்லன் திரும்பி வந்து பழிக்குப் பழி வாங்குவான் என்ற பீதி உண்டாகி விட்டது. அதற்காக இந்த சிம்மகிரிக் குன்றுக்கு வந்தான். செங்குத்தான குன்றாகையால் பகைவர்கள் அதன் பேரில் ஏறிக் கோட்டையைப் பிடிப்பது இயலாத காரியம் என்று நினைத்தான். இம்மாதிரி பதினெட்டு வருஷம் ஒளிந்து வாழ்ந்திருந்தான். கடைசியில் ஒரு நாள் மகல்லன் தன் உதவிக்குப் பாண்டிய ராஜாவின் சைன்யத்தையும் அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தான். சிம்மகிரிக் கோட்டையை அணுகினான். அச்சமயத்தில் காசியப்பனின் புத்தி பேதலித்து விட்டது. அத்தனை வருஷம் கோட்டையில் ஒளிந்திருந்தவன் அசட்டுத் தைரியத்துடன் வெளிவந்து போராடி இறந்தான்! அப்பேர்ப்பட்ட பாதகன், தந்தையைக் கொன்ற பாவி, கட்டிய, கோட்டையில் சில அற்புதமான வர்ணச் சித்திரங்கள் இருக்கின்றன. இன்று சீன யாத்திரீகளுடன் போயிருந்த போது பார்த்தேன். அடடா! அந்தச் சித்திரங்களின் அழகை என்னவென்று சொல்வது? பல நூறு வருஷங்களுக்கு முன்பு எழுதியவை. ஆனால் இன்றைக்கும் சிறிதும் வர்ணம் மங்காமல் புத்தம் புதிய சித்திரங்கள் போல் இருக்கின்றன."

"ஐயா! நான் ஒரு கேள்வி கேட்கலாமா?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"தயக்கம் ஏன்? தாராளமாய்க் கேட்கலாம்."

"சிம்மகிரிக் கோட்டை இன்னும் பகைவர் படைகளின் வசத்திலே தானே இருக்கிறது?"

"ஆமாம் அதைக் கைப்பற்றும் முயற்சியை இப்போது தொடங்கும் உத்தேசம் எனக்கு இல்லை. அதனால் வீணான உயிர்ச்சேதம் ஏற்படும்."

"அதைப்பற்றி நான் கேட்கவில்லை. ஐயா! பகைவர் கோட்டைக்குள் தாங்கள் பிரவேசித்தது உசிதமா என்று கேட்டேன். சீன யாத்திரீகர்களுக்கு யானைப் பாகனாகத் தாங்கள் போக வேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது? யானையின் கழுத்தில் தங்களைப் பார்த்ததும் என் கண்களை நம்புவதா இல்லையா என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டுவிட்டது. தங்களுடைய புருவத்தின் நெரிப்பைப் பார்த்துத்தான் சந்தேகம் தெளிந்து நிச்சயப்படுத்திக் கொண்டேன். இப்படித் தங்கள் உயிருக்கு அபாயத்தை ஏற்படுத்திக் கொள்ளலாமா?"

"என் உயிர் மட்டும் அவ்வளவு உயர்ந்ததா, திருமலை! எத்தனை சோழ நாட்டு வீரர்கள் இந்த இலங்கையில் வந்து உயிரை விட்டிருக்கிறார்கள்?"

"அவர்கள் போர்க்களத்தில் உயிர் துறந்தார்கள். தாங்கள் அநாவசியமாகத் தங்களை அபாயத்துக்கு உள்ளாக்கிக் கொண்டீர்கள்!"

"அநாவசியமில்லை இரண்டு காரணங்கள் உண்டு. சிம்மகிரிச் சித்திரங்களைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எனக்கு வெகுநாளாக இருந்தது. அந்த ஆசையை இன்று பூர்த்தி செய்து கொண்டேன்."

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## வெற்றியின் இரகசியம்



முல்லாவின் நண்பர் ஒருவர் முல்லாவிடம் வந்து நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தார். அவர் முல்லாவிடம் விடைபெற்றுக் கொண்டு எழுந்த போது அவரை நோக்கி "முல்லா அவர்களே தாங்கள் பல விதத்திலும் மக்களிடம் புகழ் பெற்றவராகத் திகழ்கிறீர்.

மன்னரிடம் உங்களுக்கு மிகுந்த செல்வாக்கு இருக்கிறது. இவ்வாறெல்லாம் நீங்கள் புகழும் பெருமையும் பெறுவதற்கு ஏதோ ஒரு ரகசியம் இருக்க வேண்டும். அந்த ரகசியம் என்னவென்று தயவு செய்து எனக்குக் கூறுவீர்களா?" என்று கேட்டார்.

"உண்மையிலே என் வெற்றிக்கு அடிப்படையான ரகசியம் ஒன்று இருக்கிறது. ஆனால் அது ரகசியமாயிற்றே. அதை ஒருவரிடம் சொன்னால் அது அப்படியே பரவிக் கொண்டே போகுமே" என்று முல்லா சொன்னார். "முல்லா அவர்களே, என்னிடம் எந்த ரகசியத்தைச் சொன்னாலும் உண்மையிலே அது என்னை விட்டுத் தாண்டாது தயவு செய்து அந்த ரகசியத்தை எனக்கு மட்டும் கூறுங்கள்" என்று நண்பர் வேண்டிக் கொண்டார்.

"நான் என் வெற்றியின் ரகசியத்தை உங்களிடம் கூறினால் யாரிடமும் கூற மாட்டீர்களே" என்றார் முல்லா.

"என்னை நம்பலாம் என்னிடமிருந்து இரகசியம் ஒரு போதும் வெளியே போகாது" என்று உறுதியாகக் கூறினார் நண்பர்.

"யாராவது உம்மிடம் வந்து ஏராளமான பணம் தருகிறேன் என்று ஆசை காட்டினால்?" என்று கேட்டார் முல்லா. "கோடிப் பொன் தருவதாக ஆசை காட்டினால் கூட யாரிடமும் கூற மாட்டேன்" என்று திடமாகக் கூறினார் நண்பர்.

"அப்படியானால் நம்பி உங்களிடம் ரகசியத்தைக் கூறலாம். மறந்து கூட இதைப் பிறரிடம் சொல்ல மாட்டீர்கள் என்று நம்பலாம் இல்லையா?" என்று முல்லா கேட்டார்.

"என்னை முழு அளவுக்கு நம்பலாம்" என்று வாக்குறுதி கொடுக்கும் விதத்தில் நண்பர் சொன்னார்.

"உண்மையிலேயே நீர் ரகசியத்தைக் காப்பாற்றக் கூடியவர்தான். என் வெற்றிக்கான ரகசியத்தைக் கூறினால் நான் ரகசியத்தைக் காப்பாற்றத் தெரியாத முட்டாள் ஆகிவிடுவேன். அதனால் அன்பு நண்பரே என் ரகசியத்தை உமக்குக் கூறத் தயாராக இல்லை. நானும் என் ரகசியத்தைக் காப்பாற்ற வேண்டுமல்லவா?" எனக் கூறியவாறு முல்லா அந்த இடத்தை விட்டு அகன்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு ஒரு விஷயத்தைப் புரிய வைக்கிறது
ஆனால் அனுபவமே அதை உணர வைக்கிறது.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அடியார்க்கெல்லாம் அமுதளிக்கும் அன்னை நயினை நாகபூசணி

அம்மா என்ற சொல் தெய்வீகமானது. தெய்வம் படைத்து, காத்து, அருளவல்லது.

அத்தகு சக்தி, பெற்ற தாய்க்கு இருப்பதனாலேயே பெற்ற தாயை அம்மா என்றழைக்கின்றோம்.

தாய்மை என்பது பெற்றதனால் பெருமை கொண்டது. இங்கு, தான் பெற்ற பிள்ளை மீது அன்பும் பாசமும் காட்டுகின்ற இயல்பு இவ்வுலகின் கண் வாழும் அத்தனை ஜீவ ராசிகளுக்கும் உரியது.

ஆனால் அத்தனை ஜீவராசிகளையும் தாயாய் இருந்து காக்கின்றவள் அன்னை பராசக்தி.

அவளின் கருணையால், உலக ஜீவராசிகள் அத்தனையும் புசிக்கின்றன.

அன்னை பராசக்தி 64 சக்தி பீடங்களில் வீற்றிருந்து உலகாள்கின்றாள்.

ஆம், 64 சக்தி பீடங்களில் ஒன்றாக விளங்கும் நயினாதீவு நாகபூசணி அம்மன், ஈழத் திருநாட்டின் தாய்.

அதனாலன்றோ நயினை நாகபூசணியாள் தன்னிடம் வரும் அடியார்க்கெல்லாம் அமுதளித்து தன் தாய்மையின் உன்னதத்தை வெளிப்படுத்தி நிற்கின்றாள்.

உண்மை. எத்தனை இலட்சம் மக்கள் சென்றாலும் அத்தனை பேருக்கும் அமுதளிப்பதென்பது மனித வல்லமைக்கு அப்பாற்பட்டது.

அதிலும் ஆழ்கடல் நடுவே வீற்றிருந்து தன் ஆட்சிப்பீடத்துக்கு வருகின்ற அடியார்க்கெல்லாம் தினந்தோறும் அமுதளித்துப் பசியாற்றுவதென்பது அந்தத் தாயைவிட யாரால் செய்யமுடியும்.

தரைவழிப்பாதை இல்லாத போதிலும் கடல் வழியாக அத்தனை உணவுப் பொருட்களையும் கொண்டு சென்று, அதனை உணவாக்கி அங்கு வருகின்ற இலட்சக்கணக்கான மக்களுக்கு அமுதளிப்பதென்பதை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். யாரால் எங்ஙனம் சாத்தியமாகும்.

ஆம், அன்னை நயினை நாகபூசணி எங்கள் இலங்கைத் திருநாட்டின் தாய். அதனால் தன்னை நாடிவரும் தன் குழந்தைகளை அவள் ஒருபோதும் பசியோடு அனுப்புவதில்லை.

அதுமட்டுமல்ல. தாயவள் தருகின்ற அன்னத்தை உண்ணும்போது எத்தனை சுவை. அம்மாவின் வீட்டில் உலவிதம் ஏது. ஒரு கவளம் இன்னும் சாப்பிடலாம் என்ற மன உணர்வோடு உண்ணுகின்ற அந்தக் கணம் எத்துணை அற்புதம்.

ஆம், தன் பிள்ளைகளுக்கு அதிகமாக உணவு ஊட்ட வேண்டும் என்ற பாசத்தால் பசிக்க வைத்து; நன்றாகச் சாப்பிடுக என்று அவள் அமுதளிக்கும் அந்த அற்புதத்தை நினைக்கும் கால் நெஞ்சம் உருகும்.

அதோ! அலைகடல் நடுவே அன்னை நயினை நாகபூசணி எங்கள் தாயாக வீற்றிருக்கிறாள்.

இன்று (24.01.2024) அவளுக்கு மகா கும்பாபிஷேகம்.

நாள்தோறும் அடியவர்க்கு அமுதளிக்கும் அன்னை பராசக்தியின் குடமுழுக்கை மனக் கண்ணாலேனும் கண்டு தரிசித்தால், பெற்ற தாயவள் எங்கள் குறைகளையெல்லாம் களைவாள். இது சத்தியம். நம்புங்கள்.

# ஊடகங்களை அடக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை

## அமைச்சர் டிரான் அலஸ்

(கொழும்பு)

ஊடகங்களை அடக்கும் வகையில் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் தயாரிக்கப்படவில்லை. சமூக ஊடகங்களின் தவறான செயற்பாடுகள் கண்காணிக்கப்படும். தேசிய மற்றும் சர்வதேச அமைப்பினர் முன்வைத்துள்ள யோசனைகள் தொடர்பில் விசேட அமைச்சரவைப் பத்திரத்தை வெகுவிரைவில் முன்வைப்பேன் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை கடந்த ஒக்டோபர் மாதம் 03 ஆம் திகதி முன்வைத்தேன்.

தேசிய மற்றும் சர்வதேச அமைப்பினர் இந்தச் சட்டமூலம் தொடர்பில் எம்முடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் பல திருத்தங்களை முன்வைத்துள்ளது. உயர்நீதிமன்றம் உட்பட தேசிய சர்வதேச அமைப்பினர் முன்வைத்துள்ள திருத்தங்கள் சட்ட மூலத்தில் உள்வாங்கப்படும்.

இந்தச் சட்டமூலம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ் பிரிவின் சட்டஅதிகாரி ஆகியோர் சிங்கப்பூருக்கு சென்று சமூக வலைத்தள நிறுவனங்களுடன் மூன்று நாட்கள் கலந்துரையாடினர். இந்த நிறுவனங்கள் கடந்த 08 ஆம் திகதி தமது பரிந்துரைகளை முன்வைத்துள்ளன. சகல தரப்பினரது பரிந்துரைகளை முழுமையாக பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளக் கூடிய திருத்தங்கள் எவை, ஏற்றுக் கொள்ள முடியாத திருத்தங்கள் என்ன என்பதை தீர்மானித்துள்ளோம்.

ஏற்றுக் கொண்டுள்ள திருத்தங்களை தற்போது சட்டமூலத்துக்குள் உள்வாங்க முடியாது. யோசனைகளை பிரத்தியேக திருத்தமாக முன்வைக்கலாம் என சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார். உயர்நீதிமன்றம் முன்வைத்துள்ள திருத்தங்கள் சட்டமூலத்தில் உள்வாங்கப்படும். முன்வைக்கப்பட்டுள்ள புதிய யோசனைகளை அமைச்சரவையில் முன்வைப்பேன். அதனை தொடர்ந்து வர்த்தமானி வெளியிடப்படும். அதற்கும் ஒரு தரப்பினர் உயர்நீதி மன்றம் செல்வார்கள் என்று எதிர்பார்க்கவில்லை.

சமூக ஊடகங்கள் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. சமூக வலைத்தளங்கள் ஊடாக நிதி மோசடி, உண்மைக்கு புறம்பான கருத்துக்களை பதிவேற்றல், சிறுவர் மற்றும் மகளிர்களுக்கு எதிரான செயற்பாடுகளை ஊக்குவித்தல் ஆகிய முறையற்ற செயற்பாடுகளை தடுக்கும் நோக்கில் இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஊடகங்களை முடக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகளுக்கு எதிராக உண்மைக்கு புறம்பான செய்திகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகுகின்றன. உண்மைக்கு எதிரான செய்திகளால் பல நெருக்கடிகள் தோற்றம் பெற்றுள்ளன.

கடந்த ஆண்டு மாத்திரம் சமூக ஊடகங்கள் தொடர்பில் 8,000 அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. நிர்வாண புகைப்படங்களை சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்ததாக 669 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆகவே இவற்றைக் கண்காணிப்பது கட்டாயமாகும்.

இந்த சட்டமூலத்தை தொடர்ந்து ஐந்து துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய விசேட ஆணைக்குழு ஜனாதிபதியால் நியமிக்கப்படும். இந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகள் சுயாதீனமாக முன்னெடுக்கப்படும். ஆகவே நாட்டு மக்களின் கருத்து சுதந்திரத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றார். (ம-7)

# விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் அல்ல

## பதில் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையை ஐ.நா உட்பட பல அமைப்புக்கள் விமர்சித்தாலும் இந்த நடவடிக்கையானது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலால் இயக்கப்படவில்லை என பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

பாதாளம் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் எங்களுக்கு தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் இல்லை. அவர்களின் நடவடிக்கைகளை ஒழிப்பதே எங்களின் ஒரே இலக்கு என்றும் எவருடனும் தனிப்பட்ட பிரச்சினைகள் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்

இதேவேளை இந்த நடவடிக்கையை எதிர்ப்பவர்கள் குற்றச் செயல்களால் ஆதாயம் அடைபவர்களாவர் போதைப் பொருள் விநியோகத்தில் ஈடுபட்ட முக்கிய நபர்களில் 65% க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டதன் மூலம் போதைப்பொருள் இருப்புக்கள் கணிசமான அளவில் குறைந்துள்ளன.

மேலும் நாட்டின் போதைப்பொருள் கடத்தல் வலையமைப்புகளை முழுமையாக அகற்றும் வரை இந்த நடவடிக்கை தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

### வவுனியா புதிய பேருந்து நிலையத்தில்

# இ.போ.ச - தனியார் பேருந்து சாரதி, நடத்துனர்கள் கைகலப்பு

(வவுனியா)

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் இலங்கை போக்குவரத்து சபை பேருந்து சாரதி, நடத்துனருக்கும், தனியார் பேருந்து சாரதி, நடத்துனருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக நால்வர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பாக வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் தனியார் பேருந்து தரிந்து நின்றுள்ளது. இதன் போது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும் வருகை தந்து புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பாக தரிந்து நின்றுள்ளது.


இதன் போது இரு பேருந்தின் ஊழியர்களுக்கிடையே நேரசூசி தொடர்பில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதுடன், இ.போ.சபை பேருந்தின் லைட் உடைக்கப்பட்டது. இதனையடுத்து அவர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதில் இ.போ.ச., தனியார் பேருந்து ஆகிய இரு பேருந்தின் நடத்துனர், சாரதி என நால்வரும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலிஸார் இரு பேருந்தினையும் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றமையுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ம-7.250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவில் வீற்றிருந்து அருள்புரியும் நாகபூஷணிக்கு இன்று கும்பாபிஷேகம்



அகில உலகமெல்லாம் நிறைந்து நின்று, உயிர்கள் எல்லாம் உய்யும் வண்ணம் அருள்சுரந்து காப்பவள் அன்னை பராசக்தி. இச்சக்தி வழிபாடு மிகவும் பழைமை வாய்ந்தது. தொன்மையான காலத்திலிருந்தே உலகமெல்லாம் பரவி வந்துள்ளது. பாரத நாடு முழுவதும் சக்தி வழிபாடு உள்ளது.

அன்னை பராசக்திதான் சக்திகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்குகின்றாள். காசியில் விசாலாட்சியாகவும் காஞ்சியில் காமாட்சியாகவும் மதுரையில் மீனாட்சியாகவும் பல திருநாமங்களைக் கொண்ட சக்தியானவள் நயினையில் "புவனேஸ்வரி" யாகவும் வீற்றிருந்து அருளாட்சி செய்து வருகின்றாள். வேண்டுவோர்க்கு வேண்டியதை அருளுகின்ற காரணத்தினால் சக்தியானவள் அகில உலகங்களுக்கெல்லாம் அன்னையாக விளங்குகின்றாள்.

கடலும் கடல் சார்ந்த நிலமுமாக விளங்குவது நயினாதீவாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் சப்த தீவுகளின் நடுவே சரித்திரப் பிரசித்தி பெற்ற தீவாக விளங்குவதும் இத்தீவாகும். "கடுகு சிறியதெனினும் காரம் பெரியதென்ற" முதுமொழிக்கிணங்க நயினாதீவு, அளவால் சிறியது எனினும் தொல் புகழால் தலைசிறந்த தீவாக விளங்குகின்றது. இத்தீவிற்கு பல சிறப்புப் பெயர்கள் உண்டு. நாகதீவு, நயினாதீவு, நாகநயினார் தீவு, மணிபல்லவத் தீவு, மணித தீவு, பிராமணத்தீவு, நாகேஸ்வரம் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டு வந்த பெருமையுடையது இத்தீவாகும். மணிமேகலாத் தெய்வம் இத்தலத்திற்கு விஜயம் செய்த போது மணிபல்லவமாக இருந்திருக்கின்றது.

சக்திபீடங்களுள் இது ஒன்றே. இலங்கையில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. சக்திபீடமாகத் திகழ்வது நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயிலாகும். இலங்கையில் இவ்வாலயத்தைப் போன்று தொன்மையும் புகழும் வாய்ந்த சக்திபீடம் வேறொன்றில்லை எனலாம். தனது அளவில்லா கருணையினாலே உலகிலுள்ள உயிர்வர்க்கங்களை அரவணைப்பவள் ஸ்ரீநாகபூஷணி அம்மன். "பாலினைந் துாட்டும் தாயினும் சாலப்பரிந்து" திருவருள் பாலித்தும் பலவித அற்புதங்களைப் புரிந்து கொண்டும் நயினையம்பதியில் வீற்றிருக்கின்றாள் அன்னை நாகபூஷணி. அழகுக்கொருவரும் ஒவ்வாத வல்லியாக அன்பர் என்பவர்க்கு நல்லன எல்லாம் தருபவளாக அடியார்களுக்கு நேசக்கரங்களை நீட்டி நிம்மதி தருகின்றார் அன்னை. "அடியார்களின் கண்ணீரைக் காணிக்கையாக ஏற்று நெஞ்சக் கனகல்லை உருகச் செய்கின்றாள்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் சிறப்புக்களைக் கொண்டமைந்த நாகபூஷணி அம்பாள் பயபக்தியுடன் வழிபடக்கூடிய வழிபாட்டுத் தெய்வமாகவும் சிறப்புற்று விளங்குகின்றாள். மூலஸ்தானத்தில் அம்பாள் உருவம் போல இருப்பது பழைய நாகபிரதிஷ்டை என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும்.



இதற்குப் பின்புறத்தில் ஐந்து தலை நாகப்பிரதிஷ்டை காணப்படுகின்றது. இது மிகவும் பழைமை வாய்ந்தது. தூய்மையான நாக வழிபாடு இவ்வாலயத்தில் பழங்காலத்திலிருந்தே நடைபெற்று வருவதை அறியக்கூடியதாகவுள்ளது. இக்காரணங்களை வைத்து இவ்வாலயம் நாகவழிபாட்டின் தொன்மையான கருவூலமாக இருந்திருக்கின்றது என்பதை அறியலாம்.

இந்தவகையில் அம்பாளை தரிசித்து நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதற்காக நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான அடியார்கள் நயினையம்பதிக்கு வருகின்றார்கள். அலைகடலில் நீந்தி அருட்கடலை நாடி வருகின்ற அடியார்களின் துன்ப துயரங்களை எல்லாம் நீக்கி அருளுகின்றாள் அன்னை.

மேலும் நயினாதீவின் வடக்கே உள்ள புளியந்தீவில் இருந்து ஒரு நாகபாம்பு கடல் மார்க்கமாக பூக்களை எடுத்து வந்து அம்பாளுக்கு பூஜிப்பது வழக்கம். இப்படியாக ஒரு நாள் பூவை எடுத்துக் கொண்டு நீந்தி வருவதைக் கண்ட கருட பறவை ஒன்று நாகபாம்பைக் கொல்வதற்காக வானத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. இதனால் பயம் கொண்ட நாகபாம்பு கடல் நடுவே உள்ள பார்க்கல் ஒன்றை சுற்றிக் கொண்டிருந்தது. கருடனும் எதிரேயுள்ள பார்க்கல் ஒன்றின் மீது அமர்ந்து கொண்டது.

இச்சந்தர்ப்பத்தில் கடல் வழியாக வணிகன் ஒருவன் மரக்கலத்தில் பண்டங்களை ஏற்றி வந்த போது இக்காட்சியை கண்டான். பாம்பின் மீது இரக்கம் கொண்டு நாகபாம்பை கொல்ல வேண்டாம் என கருடனை வேண்டிக்கொண்டான். அதற்கு கருடன் நீ உனது செல்வங்களை எல்லாம் கொண்டு வந்து அம்பிகைக்கு கோயில் கட்டுவதாக உறுதி அளித்தால் நான் நாகத்தைக் கொல்லாது விட்டு விடுகின்றேன் என்றது. வணிகனும் அவ்வாறே உறுதி அளிக்க கருடனும் நாகத்தைக் கொல்லாது விட்டுவிட்டது.

இக்கதைக்குச் சான்றாக அம்பிகையின் வடகடலில் பாம்பு சுற்றிய கல், கருடன் இருந்த கல் என இரண்டு கற்கள் காணப்படுகின்றன. அடியார்கள் இக்கற்கள் இரண்டையும் வழிபாடு செய்து சரித்திர சான்றுகளை நினைவு படுத்துகின்றனர். அம்பிகையின் பதினோராவது திருவிழாவின் போது இக்கற்கள் இரண்டிற்கும் பூஜைகளும் வழிபாடுகளும் இடம் பெற்று வருகின்றன. இந்த வழிபாட்டின் போது கருடப்பறவைகள் குறித்த இடத்தில் வானத்தில் வட்டமிடுத் செல்வதாகவும் அடியார்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

புராதன பெருமை வாய்ந்த நாகபூஷணி அம்மன் ஆலயத்தை போர்த்துக்கீசர் இடித்த போது சைவ நன்மக்கள் துடிதுடித்தார்கள். தாங்கள் பயபக்தியுடன் வழிபட்டு வந்த அம்பாளையும் ஏனைய மூர்த்திகளையும் அவர்கள் தீண்டக் கூடாது என எண்ணி ஒளித்து வைத்தார்கள். அம்பாளை மேற்குக் கடற்கரையில் உள்ள ஓர் ஆலமர பொந்தில் வைத்து வழிபட்டதாக ஒரு ஐதீகம் உண்டு. அந்நியர் கோயிலை இடித்த போதிலும் அம்பாள் வழிபாட்டை நிறுத்தவில்லை.

அந்நியர் கோயிலை இடிக்க வந்த போது கோயில் தேர் தானாகவே உருண்டு மேற்குக் கடலில் அமிழ்ந்து விட்டதாகவும் பௌர்ணமி தினத்தில் தேர் முடி தெரிவதாகவும் ஓர் கதை உண்டு.

நாகசாந்தி செய்வதன் மூலம் நாகதோஷம் நீங்குகின்றது என்ற நம்பிக்கை அடியார்களுக்குண்டு. அடியார்கள் பலர் தங்கள் நேர்த்தியாக நாகசாந்தி செய்வதற்கு நயினாதீவு வருகின்றார்கள். நாக தோஷத்தை நிவர்த்தி செய்து பிள்ளைப் பேறடைந்தவர்கள் பலர். பிள்ளைப் பாக்கியம் பெற்றவர்கள் தங்கத்தால் தொட்டிலும் பிள்ளையும் செய்து அம்பாளுக்கு கொடுத்து நேர்த்திக் கடன்களை நிறைவு செய்கின்றனர்.

நித்திய அன்னதானம் ஆலயத்திலும் திருவிழாக்காலம், தைப்பூசம், ஆடிப்பூரம் போன்ற விசேட உற்சவ காலங்களில் "அமுதசுரபி" அன்னதான சபை மண்டபத்திலும் நிகழ்கிறது. நாக வழிபாட்டுத் தொன்மையுடையதும் "மணிபல்லவம்" என்பது நயினாதீவு என்பதற்கான சான்றுகளும் மூலாதாரங்களும் வரலாறுகளும் என நிரூபித்து நிற்கின்றன. "அமுதசுரபி" அன்னதான சபையினர் "அமுதசுரபி" இல்லம் அமைத்து பல்லாயிரக்கணக்கான அடியவர்களுக்கு அமுதளிக்கும் பெருந் தொண்டைச் செய்து வருகின்றனர்.

**இன்று (24.01.2024) புதன் கிழமை நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் மகாகும்பாபிஷேகம் வெகுசிறப்பாக இடம் பெறவுள்ளது. அன்னையின் நல்லருளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் அன்னையின் மகாகும்பாபிஷேகத்தை கண்டு களித்து நயினை நாகம்பாளின் அருள் தரிசனத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

நயினை நா.க.குமாரசூரியர், J.P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடு முழுவதும்...

யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பட்டியலிலிருந்த 322 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 187 கிராம் ஹெரோயின், 14 கிலோ 700 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன், போதைப்பொருளையும் கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## வழிபாட்டுத்...

என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நிகழ்ச்சி நிரல் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பௌத்த மதத்தின்படி எமது நடத்தைகள் மற்றும் செயற்பாடுகள் உயர் விழுமியங்களை மையமாகக் கொண்டதாக இருக்க வேண்டும் எனவும், நாகரீகமான சமூகத்தில் பணிவாகவும் விவேகமாகவும் செயற்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மேலும், தனது தந்தையான முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவும் தெவிநுவர விகாரைக்கு பல சேவைகளை செய்துள்ளதாகவும், அந்த சேவைகளை மேலும் தொடர்வதே தனது நோக்கமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## இன்று மகா...

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 09.38 மணி முதல் 11.20 மணி வரையிலான சுபநேரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

நயினைத் தாய்க்கு பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் எண்ணெய் காப்பு சாத்தி வழிபட்டனர்.

இன்று நடைபெறவுள்ள, கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வெளிநாடுகள் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்களின் நலன் கருதி விசேட போக்குவரத்து ஏற்பாடுகள், சுகாதார வசதிகள் என்பன செய்யப்பட்டுள்ளன. (ம-7)

## வவுனியாவில்...

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வவுனியாவில் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக 2529ஆவது நாட்களாக சுழற்சிமுறையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் நேற்று கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

"எங்கே எங்கே எமது உறவுகள் எங்கே? வேண்டும் வேண்டும்"எமது உறவுகள் வேண்டும்", "உறவுகளை மீட்க சர்வதேசம் வேண்டும்" போன்ற கோசங்களை எழுப்பியவாறும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியக் கொடிகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 30 நிமிடங்களாக இடம்பெற்ற இக்கவனயீர்ப்பு போராட்டத்தில் 30க்கு மேற்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கலந்து கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## விவாதத்துக்கு...

தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று அவசர வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதில், விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆதரவாக 83 வாக்குகளும், விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்று 53 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதன்பிரகாரம் இந்தச் சட்டமூலம் மீது விவாதத்தை நடத்துவதற்கு 30 மேலதிக வாக்குகள் கிடைத்துள்ளன. (ம-7)

## ஹெகலியவை...

அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கடிதத்தினை மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்திய சங்கம் உள்ளிட்ட பல தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் குழுவினர் இணைந்து ஜனாதிபதி செயலாளரிடம் கையளித்துள்ளனர்.

முன்னாள் சுகாதார அமைச்சரை தற்போதும் அமைச்சரவையில் தக்க வைத்திருப்பதானது, மக்களின் நம்பிக்கையை மீறும் செயலாகும் என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ம-7)

## இணைய வழி...

சிறீதரன் தெரிவித்துள்ளார்.

குறித்த சட்டமூலம் தொடர்பில் பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இணையவழி பாதுகாப்புச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் பாராளுமன்றில் நேற்று இடம் பெற்றது.

இந்தநிலையில் இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கருத்துரைத்த பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தாம் அதனை முழுமையாக எதிர்ப்பதாக தெரிவித்தார். (ம-7)

## கிளி...

யில் தனியார் வங்கி ஒன்றில் பணிபுரியும் வங்கி உத்தியோகத்தரும் அவரது கணவனும் இணைந்து முதியவர் ஒருவரிடம் மூன்று இலட்சத்து ஐம்பாயிரம் மற்றும் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் என ஆறு இலட்சம் ரூபாய் பணத்தினை மோசடியாகப் பெற்று குறித்த முதியவரை ஏமாற்றியுள்ளதுடன் அதற்கு பதிலாக மறுக்கப்பட்ட காசோலையினையும் வழங்கியுள்ளனர்.

இவ்வாறுபாதிக்கப்பட்ட முதியவரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் இருவருக்கும் எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ததோடு இருவரையும் கைது செய்துள்ளனர்.

குறித்த வங்கி ஊழியரும் அவரது கணவரும் ஏற்கெனவே பலரை ஏமாற்றி மோசடிக் குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-7,316)

## யுக்திய...

எதிராக செயற்படும் சில குழுக்கள் உள்ளன, அந்த குழுக்களும் எதிர்க்கின்றன. எமக்கு எதிராக செயற்படுகின்றன, சமூகவலைத்தளங்களில் சேறு பூசுகின்றன.

போதைப்பொருள் வலையமைப்பில் உள்ளவர்களிடம் பணம் வாங்கும் தரப்புகளே இந்த செயலில் ஈடுபட்டுள்ளன.

யுக்திய நடவடிக்கையை நிறுத்துவதற்கு சில மதத்தலைவர்கள் முற்படுகின்றனர், சில சட்டத்தரணிகளும் தொடர்புபட்டுள்ளனர், அரசியல் கட்சிகளில் உள்ள சிலரும் தொடர்புபட்டுள்ளனர் என தெரிவித்துள்ளார். (ம-7)


தன நிதானய
திகதி 2024/01/23
சீட்டிழுப்பு இலக்கம் 1398
L 23 43 57 75 L
43227

மெகா பவர்
திகதி 2024/01/23
சீட்டிழுப்பு இலக்கம் 1716
G 08 07 08 31 76
22337

மஹஜன சம்பத
திகதி 2024/01/23
சீட்டிழுப்பு இலக்கம் 5368
C 3 1 3 1 6 3

லக்கி 7 VIP
திகதி 2024/01/23
சீட்டிழுப்பு இலக்கம் 194
C 8 0 2 3 9 2 C

கொவிசெத
திகதி 2024/01/23
சீட்டிழுப்பு இலக்கம் 3610
J 20 34 44 59
J 70286
தேசிய லொத்தர் சபை

ஹதஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2024/01/23
சீட்டிழுப்பு இலக்கம் 0677
16 32 33 40
19830 13

உத்தியோகபூர்வ முடிவுகள்
23.01.2024 வெற்றி வாரம் 076 வர்ணம் சிவப்பு
Q 1 4 4 3 5 7
50723
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 27,080,255.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2342 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.01.23 தினம் செவ்வாய்க்கிழமை
20 41 59 68 B
79868
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,659,796.80

சனிதா
திகதி 2024.01.23 வெற்றி வாரம் 4503
15 19 43 62 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,000,000.00
8 2 1 1 1

சசிரி
வெற்றி வாரம் 432
சீட்டிழுப்பு திகதி 2024.01.23
06 35 44
09
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,256,240/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4054 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.01.23 தினம் செவ்வாய்க்கிழமை
44 51 56 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000.00
524160

கப்ருக
1518
23.01.2024 செவ்வாய்
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 33 11 15 22 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 496,613,276.20

ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2168
சீட்டிழுப்பு திகதி : 2024.01.23
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 85,846,034.40
01 10 25 27 H
253586


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18725)

076 825 7716 (ஆகாஸ்)

## Group & Personal Class

123/2, Temple Road, Jaffna

"தைப்பூசத் திருநாளில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகிறது"

SCIENCE

- 2023 (O/L) மாணவர்களுக்கான விசேட மீட்டல் வினா - விடை வகுப்புக்கள்
- 10 வருட வினாத்தாள் ஆராயப்படும்.
- தரம் 6 - 11 வரையான வகுப்புக்கள்

ஆரம்பம் : 25.01.2024 வியாழன் 10 Am (18740)

N.MAHENDRAN
Sp.Trd in Scince
T.P : 076 343 2521

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-8194)

## வேலையாட்கள் தேவை

விற்பனை வாகனத்திற்கு காசாளர்/உதவியாளர் தேவை.
சம்பளம் 30,000 வரை

24.01.2024 முதல் 25.01.2024 வரை மாலை 3.00pm - 6.00pm நேரில் வரவும்.

இடம்: ULTRA HOME, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி, கிழக்கு, யாழ்ப்பாணம்(பூங்கனிச்சோலை முன்பாக)

குறிப்பு: திருநெல்வேலியிலிருந்து 5 Km க்கு உட்பட்டவர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு : 077 0057 737 (18732)

## நாகபூஷணி திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் எம்மால் தெரிவு செய்து தரப்படும்.

இல.264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
021 222 9306,
071 999 9306, 077 138 7596 (18738)

## விற்பனைக்கு

கெற்பேலியில் 13 பரப்பை உடைய தென்னங்காணி விற்பனைக்கு உண்டு. போக்குவரத்து வசதி உண்டு.

076 674 9423 (18731)

## துரித பொதிகள் சேவை

- சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
- அவுஸ்திரேலியா விசேட சலுகை
- உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணெய் வகைகள் என்பன எம் ஊடாக அனுப்பிட முடியும்.
- ஏனைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள் உண்டு.

திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (18723)

## சயன்ஸ் அக்கடமி

நல்லூர் - முருகன் ஆலயம் முன்பாக | நாவலர் வீதி, அரியாலை.

தொ.பே : 077 538 8471, 077 312 6807

புதிய கல்வியாண்டு - 2024 ஆரம்பம்

தரமான கல்வியை என்றும் வழங்கும் முதற்தர நிறுவனம்

நிகரற்ற சிறப்பான நிர்வாக கட்டமைப்பின் கீழ் யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலுடன் 40 வருடங்களுக்கு மேலான கல்விப் பாரம்பரியத்தில் கல்வியிலும், ஒழுக்கத்திலும் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம் 2023 ஆம் ஆண்டின் சாதனைப் பெறுபேறுகளுடன்

கல்வியாண்டு 2024 இல் சிறப்பாக ஆரம்பமாகின்றது.

| வெற்றித்தேர்வு ஆரம்பக்கல்விப் பிரிவு | தரம் 6 முதல் தரம் 11 வரை |
|---|---|
| தரம் 1 முதல் தரம் 5 வரை<br>வாராந்தம் வெற்றித்தேர்வு பரீட்சைகளோடு விசேட புலமைப்பரிசில் வகுப்புகள் | தமிழ்மொழி மூல வகுப்புக்கள்<br>English Medium Classes |

இவற்றுடன் ICT, சிங்களம், ஆகிய பாடங்களும்

இவை அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று உங்கள் பிள்ளைகளும் சாதனையாளர்களாக எம்முடன் இணைந்திருங்கள்

அனுமதிகள் வழங்கப்படுகின்றன. இன்றே பதிவுகளை மேற்கொள்ளலாம். (C-8196)

"எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே"

## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன், மணமகள் தேவையெனில் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். உள்நாட்டு/ வெளிநாட்டு மணமகன், மணமகள் தாராளமாக உள்ளன.

+14372446737
கனடா +16476571347
077 240 9276 (18521)

## சாரதி தேவை


கொழும்பு - யாழ்ப்பாணம் வழித்தடத்தில் பாரவூர்தி(லொறி) ஓடக்கூடிய சாரதி தேவை.

தொடர்புகளுக்கு :
077 617 8009 (18736)


# 76 வது பிறந்தநாளும் 25 வது ஆண்டு நினைவு நாளும்

முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட செயலாளர் நாயகமும் அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவரும் சமாதான நீதவானும் திருமுருகன் களஞ்சிய உரிமையாளரும் முன்னாள் வட பிராந்திய மினிபஸ் சங்கத் தலைவருமாகிய

## உயர்திரு. பொன்னுத்துரை மதிமுகராஜா



கடவுள் கொடுத்த வரம் கிடைக்கவில்லை
கடவுளே (அப்பா) கிடைத்தார் வரமாக
நான் பிறந்தபோது என் பெயரின் பின்னால்
வரும் முதல் எழுத்து நீங்கள்தான் என்று
என் வாழ்க்கையை அழகாக மாற்றிக் கொடுத்து
எங்கள் பின்னால் நிற்பதும் நீங்கள் மட்டும்தான்
அப்பா என்னும் எங்கள் தெய்வம்
தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும்
தந்தை அன்பின் முன்னே!
காலை கண் விழிக்கும் நொடிகள் எல்லாம்
உங்கள் ஞாபகங்கள் அப்பா!
உங்கள் நினைவுகள் எங்கள் மனதில்
அழியாச் சுவடாய் பொதிந்துள்ளன.

நீங்கள் இல்லாத வாழ்க்கை நரகமாய் உள்ளது அப்பா!
உங்களைப் பிரிந்து 25 ஆண்டுகள் ஆனாலும்
அன்று முதல் இன்றுவரை உங்கள் அன்பிற்கு
இணை யாருமில்லை அப்பா!
உங்கள் பாசத்திற்கு ஏங்கும் எங்கள் ஏக்கங்கள்
உணர முடியாத வலியாய் எங்களைக் கொல்கின்றது அப்பா
இன்றோ உங்கள் பிறந்த நாள். ஆனால்
எங்கள் மனம் நினைவஞ்சலி செலுத்த மறுக்கின்றது அப்பா
ஆகாயத்தின் எல்லை என்று கூறினால்
அது உங்கள் உருவம்தான் அப்பா!
நீங்கள் வேண்டும் உங்களுடன் வாழ்ந்த அந்த
பொக்கிஷமான நாட்கள் வேண்டும் அப்பா!
சின்ன வயதில் இழக்கக்கூடாத சொத்து நீங்கள் அப்பா!
அப்பா நீங்கள் எங்கள் அருகில் இருக்கையில்
இறைவன் கூடத் தேவையில்லை.

(C-8197)

பெற்றோர்
மகிழ
24.01.1948

மனைவி,
மக்கள் கதற
26.12.1998

பொன் மதிமுகராஜா விஜயகாந்த்
(தலைவர் - அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவை சமூக சேவை அமைப்பாளர், யாழ்ப்பாணம், இலங்கை)
ஸ்ரீமுருக பவனம், தாவடி வடக்கு, கொக்குவில்.
அனைத்துலக சமூக சேவைகள் நற்பணி, பொதுப் பணிச் செயலகம்,
(கே.கே.எஸ்.வீதி, தாவடிச்சந்தி, யாழ்ப்பாணம், இலங்கை)

077 620 2077, 077 775 0312

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல.101, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org